# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பௌஸ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, ஓகத்து மாதம் 10 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 10.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பௌஸ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்) 8/2005*

**பௌஸ் நம்பிக்கைப் பொறுப்புக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"பௌஸ் நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் : — முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் கூட்டிணைக்கப்படுவதற்காக, விண்ணப்பித்துள்ளதாதலாலும்; அவ்விண்ணப்பத்தை அனு மதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பௌஸ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நம்பிக்கைப் பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பௌஸ் நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் தற்போதைய உறுப்பினர்களாக இருக்கின்றவர்களும் அல்லது சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள் ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) "பௌஸ் நம்பிக்கைப் பொறுப்பு" என்ற பெயரின் கீழும் — பௌஸ் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.

மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** நம்பிக்கைப் பொறுப்பு அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது —

(அ) தென்மாகாணத்தில் வளங்கள் குறைவான தமிழ் மொழி மூல முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்துதல் ;

(ஆ) சிங்கள மொழி மூலம் கல்விகற்கும் முஸ்லிம் மாணவர்களுக்கு சிங்கள மொழியில் கல்விசார் விடயப் பொருட்களை வழங்குதல் ;

(இ) தென்மாகாணத்தில் உள்ள வேலையற்ற முஸ்லிம் இளைஞர்களுக்காக வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதலும், மற்றும் அவர்களுக்கு சுயவேலை வாய்ப்புக்காக நிதிசார் உதவிகளையும் வழிகாட்டிகளையும் வழங்குதல் ;

(ஈ) முஸ்லிம் மக்களிடையே சீதன முறையை ஒழிப்பதற்காக எடுத்துக்கூறுதல் ;

(உ) உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக முஸ்லிம் இளைஞர்களுக்கு புலமைப்பரிசில்களை அளித்தலும் நிதிஉதவிகளை வழங்குதலும் ;

(ஊ) அவர்களது சுய "நிகாஹ்" சடங்கிற்கு நிதி தேவைப்படும் முஸ்லிம் பெண்களுக்கு நிதி உதவி வழங்குதல் ; அத்துடன்

(ஏ) வீடற்ற முஸ்லிம் மக்களுக்கு வீட்டுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அவசியமாகக் கூடியவாறான தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும், அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதலும், அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக எவரேனுமாளிடமிருந்து, கூட்டிணைக்கப்பட்ட அல்லது வேறுவகையான ஆட்கள் குழுவிடமிருந்து ஏதேனும் உதவியை, மானியக் கொடையை அல்லது கொடையைக் காசாக அல்லது பொருளாகப் பெறுதலும் அல்லது சேகரித்தலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்தும் நோக்கத்திற்காக வெளிநாடுகளில் கூட்டுத்தாபனத்தின் கிளை ஒழுங்கமைப்புகளைத் தாபித்தலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பணம் கடன் பெறுதலும் அல்லது திரட்டுதலும், அவ்வாறு கடனாகப் பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட பணத்தின் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் ஈட்டை அல்லது முறியை எழுதி நிறைவேற்றுதலும் ; அத்துடன்

(உ) ஒன்றில் நேரடியாகவோ அல்லது அதற்கெனக் கூட்டுத்தாபனத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அதன் அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது முகவர்கள் மூலமாகவோ கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்க

ளையும் அலுவல்களையும் நிறைவேற்றுவதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்க ளையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதலும் அல்லது புரிதலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், தலைவர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப் பட்ட எண்ணிக்கையான அத்தகைய உறுப்பினர்களால் நிருவகிக் கப்படுதலும் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இல் உள்ளது எதுவும் எப்படியிருப்பினும், நம்பிக்கைப்பொறுப்பின் ஸ்தாபகத் தலைவரான திரு. எம். எல். பௌஸ் அவர்கள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்புத் தலைவராக இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**6.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது கையுதிர்க்க உள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக் கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாத விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறை யானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களின் உறுப்பாண்மையில் இருந்து உறுப்பினர்களை மீளப்பெறுதல் அல்லது வெளியேற்றுதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், அவர்களுடைய பதவிக்காலம் மற்றும் அவர்களுடைய தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில், அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல் மற்றும் முகாமைசெய்தல், அதனது நிதியத்தைக் கட்டுக்காவலில் வைத்திருத்தல் மற்றும் அதனது கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(உ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் மற்றும் அதனது குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1)ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவது போன்ற அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8**. கூட்டுத்தாபனத்தின் நிதியமானது ,—

(அ) இச்சட்டம் தொடங்கிய திகதிக்கு நேர்முந்திய நாளன்று நம்பிக்கைப் பொறுப்பின் வரவில் இருந்த எல்லாப் பணத்தொகைகளையும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கிய திகதிக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்துக்குத் திரளக்கூடிய எல்லாப் பணங்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம் சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளர்களால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்தப்படவுள்ளனவும் நம்பிக்கைப் பொறுப்புக்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய நாளன்று நம்பிக்கைப் பொறுப்பிற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இத்தால் அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறு அத்தகைய எண்ணிக்கையான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதலும் வேண்டும். அப்படி கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருக்கின்றவிடத்து, அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன்

அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையும் ஆன வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத் தாபனத்தின் கலைப்பின்போது அல்லது கலைப்புக்கு உடனடியாக முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*